DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.
C.C.No. 548 /2009

Deposition of witness for: PW - 4

| | | | |
|---|---|---|---|
| Name | : Seethai | Father/Husband Name: | Ramasami |
| Village | : | Taluk | : |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |
| Date | : 14.12.2020 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 2020.

முதல் விசாரணை:

நான் கொட்டகுடியில் வசிக்கிறேன். விவசாயவேலை செய்கிறேன். அ.சா.1 என் கணவர். எதிரிகள் அனைவரையும் தெரியும். ஆஜர் எதிரியின் பெயர் குருமூர்த்தி. சுமார் 11 வருடங்களுக்கு முன்பு ஒருநாள் மாலை 05.45 மணியளவில் என் கணவர் அ.சா.1 வயலுக்கு சென்றுகொண்டிருந்தபோது ராஜா, குருமூர்த்தி, கார்த்திக் ஆகிய மூன்றுபேரும் காரில் வந்து டி. வி. எஸ்-50யில் சென்ற என் கணவரை மறித்து கார்த்திக் என்பவர் வெட்டினார். என் கணவரை ஆட்டோவில் ஏற்றி மருத்துவமனை செல்வதற்காக நாங்கள் வீட்டிலிருந்து கிளம்பினோம். அப்போது ஆரம்மாள், லெட்சுமி, அமுதா ஆகியோர்கள் மறித்து கம்புகளை வைத்து அடித்தார்கள். ஆட்டோவை செல்லவிடாமல் ஆட்டோவையும் மறித்தார்கள். குருமூர்த்தி, சிவலிங்கம், சிவா, ராஜா, கார்த்திக் ஆகியோர்கள் மறித்து ஓடிவந்த என் கணவரை குருமூர்த்தி கத்தியால் என் கணவரை வயிற்றில் குத்திவிட்டார். என் மகன் ஆதி என்பவரையும் விரட்டி அவர் குணிந்தபோது அவரது பின்பக்கம் பிடரியில் கார்த்திக் என்பவர் அருவாளால் வெட்டினார். பிறகு எல்லோரும் ஓடிவிட்டார்கள். பிறகு என் கணவரை மருத்துவமனைக்கு கொண்டுசெல்லவிடாமல் மறித்துக்கொண்டார்கள். பிறகு நாங்கள் காவல்துறைக்கு போன் செய்து தகவல் சொன்ன பிறகு காவல்துறையினர் வந்தார்கள். அதன்பிறகு நாங்கள் மேலூர் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சென்றோம். பிறகு போலீசார் எங்களை விசாரித்து எழுதிக்கொண்டு மதுரை பெரியாஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தார்கள். மேற்படி மதுரை அரசு மருத்துவமனையில் என் கணவர் 20 நாட்களும், என் மகன் 6

நாட்களும் உள்நோயாளியாக சிகிச்சை எடுத்துக்கொண்டார்கள். போலீசார் என்னை விசாரித்தனர்.

குறுக்கு விசாரணை:

எனக்கு வயலில் நடந்த சண்டை நேரடியாக தெரியாது என்றால் சரிதான். என் வயலில் இருந்து என் வீடு அரை கிலோ மீட்டர் தூரம் இருக்கும் என்றால் சரிதான். எங்கள் ஊரில் மீனாட்சி மருத்துவமனை கிளை உள்ளது என்றால் சரிதான். என் கணவர் வயலில் இருந்து எந்த வண்டியில் வீட்டிற்கு வந்தார் என்றால் மோட்டார் சைக்கிளில் வந்தார். அந்த வண்டியை ஓட்டி வந்தவர் பெயர் என்னவென்றால் மாணிக்கம். என் கணவர் எங்கள் ஊரில் நிறையபேரிடம் சண்டைபோட்டு நிறைய வழக்குகள் இந்த நீதிமன்றத்திலும் காவல் நிலையத்திலும் உள்ளது என்றால் தெரியாது. என் கணவர்மீது காவல் நிலையத்தில் வழக்கு உள்ளது தெரிந்தே நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிகள் அமுதா, கார்த்திக் ஆகியோர் மேலூரில் குடியிருக்கிறார்கள் என்றால் சரிதான். சண்டை நடந்த பிறகு நாங்கள் எந்த வண்டியில் மருத்துவமனைக்கு வந்தோம் என்றால் சுமோ வண்டியில் வந்தோம். யார் யார் வந்தோம் என்றால் நான், என் கணவர், மகன், ரவி மற்றும் பாண்டி ஆகியோர்கள் வந்தோம். அந்த வண்டியை ஓட்டி வந்தவர் எங்கள் ஊர்க்காரர்தான் என்றால் நான் பரபரப்பில் அதை கவனிக்கவில்லை. என்னை போலீசார் எத்தனை நாட்கள் கழித்து விசாரித்தனர் என்றால் போலீசார் என் கணவர் வெட்டுப்பட்டிருக்கும்போதே அங்கு வந்துவிட்டனர், என்னை விசாரித்தனர் நான் சொல்லவில்லை. சம்பவம் நடந்திருந்தால் சொல்லியிருப்பேன் என்றாலும் நடக்கவில்லை என்பதால்தான் சொல்லவில்லை என்றால் சரியல்ல. சம்பவமே நடக்கவில்லை, என் கணவர் புகார்தாரர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கிற்கும் எதிரிக்கும் சம்மந்தமில்லை என்றால் சரியல்ல.

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.
C.C.No. 548 /2009

Deposition of witness for: PW - 5

| | | | |
|---|---|---|---|
| Name | : Packiam | Father/Husband Name: | Pasupathi |
| Village | : | Taluk | : |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |
| Date | : 14.12.2020 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 2020.

முதல் விசாரணை:

நான் கொட்டகுடியில் வசிக்கிறேன். விவசாயவேலை செய்கிறேன். அ.சா.1 என் மாமா. ஆஜர் எதிரி குருமூர்த்தியை தெரியும், மற்ற எதிரிகளையும் தெரியும். சுமார் 11 வருடங்களுக்கு முன்பு ஒருநாள் மாலை 05.15 மணியளவில் தென்னங்கன்று வயலில் அ.சா.1ம் ராஜேந்திரன் என்பவரும் இருசக்கர வாகனத்தில் வயலுக்கு சென்றுகொண்டிருந்தபோது சிவப்பு கலர் பிளசரில் வந்து ஆஜர் எதிரியை என் மாமா அ.சா.1ன் வண்டியை நிறுத்தி 1வது எதிரி வெட்டுங்கடா என்று சொல்லி 1வது எதிரி கத்தியை வைத்து என் மாமா அ.சா.1ன் வயிற்றில் குத்திவிட்டார். ராஜேந்திரன் என்பவர் ஏன் இவ்வாறு செய்கிறீர்கள் என்று கேட்தற்கு இது எங்கள் குடும்ப விசயம் அதனால் நீங்கள் தலையிடவேண்டாம் என்று எதிரிகள் சொல்லிவிட்டார்கள். அப்போது என் மாமா தப்பித்து ஓட முயற்சித்தபோது சிவலிங்கம் மற்றவர்கள் என் மாமாவை பிடித்துக்கொண்டார்கள், அவர்களிடமிருந்து தப்பித்து வீட்டிற்கு வந்த என் மாமாவை ஆட்டோவில் ஏற்றும்போது ஆரம்மாள், அமுதா லெட்சுமி ஆகியோர்கள் வந்து இன்னும் சாகாமலா வந்துவிட்டாய் என்று சொல்லி வெட்டுங்கடா என்று சொன்னார்கள். அப்போது சிவலிங்கம் என்பவர் அறுவாளை வைத்து வெட்ட வந்தார், சிவலிங்கத்திடமிருந்த அருவாளை கார்த்தி என்பவர் பிடுங்கி ஆதியை ஆ.சா.2) வெட்டவந்தபோது ஆதி குனிந்துகொண்டதால் அவரது பிடரியில் வெட்டுப்பட்டது. பிறகு மருத்துவமனை செல்வதற்கு எதிரிகள் ஆட்டோவை விட மறுத்துவிட்டார்கள். பின்னர் காவல்துறைக்கு தகவல் சொல்லி காவல்துறை வந்தபிறகு மேலூர் அரசு மருத்துவமனையில் முதல்

உதவி சிகிச்சை எடுத்துக்கொண்டு மதுரை அரசு மருத்துவமனைக்கு சென்றோம். அங்கு என் மாமா 20 நாட்களும், ஆதி 6 அல்லது 7 நாட்கள் மட்டும் உள்நோயாளியாக சிகிச்சை எடுத்துக்கொண்டார்கள். போலீசார் என்னை விசாரித்தனர்.

குறுக்கு விசாரணை:

நான், ராமசாமி ஆகியோர்களது குடும்பம் ஒரே இடத்தில் தனித்தனியாக வசிக்கிறோம் என்றால் சரிதான். நான் முதல் விசாரணையில் வயலில் நடந்ததாக சொன்ன விசயம் எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் ராஜேந்திரன் என்பவர் சொல்லி தெரியும். ராஜேந்திரன் வயலிலிருந்து தகவலை எப்படி வந்து சொன்னார் என்றால் ஓடி வந்து சொன்னார். என் மாமா அ.சா.1 வீட்டிற்கு எந்த வாகனத்தில் வந்தார் என்றால் வேதமாணிக்கம் என்பவரின் வாகனத்தில் வந்தார். வீட்டில் சம்பவம் நடந்த பின்பு நாங்கள் மருத்துவமனைக்கு எத்தனைபேர் காரில் வந்தோம் என்றால் சுமார் 6 அல்லது 7 பேர் இருக்கும், பதட்டத்தில் சரியாக தெரியவில்லை. எந்த வண்டியில் மருத்துவமனைக்கு வந்தோம் என்றால் ஆட்டோவில் வந்தோம். அந்த ஆட்டோ எங்கள் ஊரை சேர்ந்தவர் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. போலீசார் என்னை எங்கு வந்து விசாரித்தார்கள் என்றால் மருத்துவமனையில் விசரித்தானர். என்றைக்கு விசாரித்தனர் என்றால் சம்பவத்தன்றே விசாரித்தனர். சம்பவம் ஏதும் நடைபெறவில்லை என்றும், அ.சா.1 என் உறவினர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சம்பவம் நடந்திருந்தால் யார் யார் போனோம், ஆட்டோபற்றியும் சொல்லியிருப்போம் என்றால் சரியல்ல. கார்த்திக், அமுதா(முறையே 2, 8 எதிரிகள்.) ஆகியோர் மேலூரில்தான் குடியிருக்கிறார்கள் என்றால் சரிதான். அவர்கள் 1வது எதிரிக்கு உறவினர்கள் என்பதால் அவர்களையும் பொய்யாக வழக்கில் சேர்த்துள்ளீர்கள் ஏ்னறால் 2வது எதிரிதான் அ.சா.2 ஆதியை வெட்டினார்.

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.
C.C.No. 548 /2009

Deposition of witness for: PW - 6

| | | | |
|---|---|---|---|
| Name | : Periyakaruppan | Father/Husband Name: | Karuppanan |
| Village | : | Taluk | : |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |
| Date | : 14.12.2020 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 2020.

முதல் விசாரணை:

நான் கொட்டகுடியில் வசிக்கிறேன். விவசாயவேலை செய்கிறேன். அ.சா.1ஐ தெரியாது. ஆஜர் எதிரி குருமூர்த்தியை என் மைத்துனர். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரிலுள்ள முதலாவத கையெழுத்து என்னுடையதுதான். சுமார் 10 வருடங்களுக்கு முன்பு ஒருநாள் நீதிமன்றத்திற்கு வெளியே வைத்து நீதிமன்றத்தில் வேலை செய்யும் ஒரு பெண் வெள்ளை பேப்பரில் என்னிடம் கையெழுத்து வாங்கினார். என்னை பற்றி ஒரு மேடம் விசாரித்தார். பார்வை மகஜரிலுள்ள முதலாவது கையெழுத்து மட்டும் அ.சா.ஆ.2 ஆகும்.

(சாட்சியை பிறழ்சாட்சியாக அறிவிக்க கோரி அரசுதரப்பில் கேட்டுக்கொண்டதன்பேரில் அனுமதிக்கப்படுகிறது)

குறுக்கு விசாரணை அரசுதரப்பில்:

போலீசார் விசாரணையில் கடந்த 21.12.08ம் தேதி மாலை சுமார் 18 மணிக்கு நானும் பூவராகவன் என்பவரும் கொட்டகுடியிலுள்ள சம்பவ இடத்தில் கண்ணன் வீட்டின் முன்பாக நின்றுகொண்டிருந்தபோத மேலூர் காவல் நிலைய சார்பு ஆய்வாளர் அங்கு வந்து எங்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார்கள் என்றும், அந்த பார்வை மகஜரில் நானும் பூவராகவன் என்பவரும் கையெழுத்து செய்தோம் என்று சொல்லிவிட்டு தற்போது எதிரி தன் உறவினர் என்பதாலும், எதிரி கேட்டுக்கொண்டதாலும் உண்மையை மறைத்து பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

# DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.

C.C.No. 548 /2009

Deposition of witness for: PW - 7

| | | | |
|---|---|---|---|
| Name | : Nallathambi | Father/Husband Name: | Karuppanan |
| Village | : | Taluk | : |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |

Date : 14.12.2020

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 2020.

முதல் விசாரணை:

நான் கொட்டகுடியில் வசிக்கிறேன். விவசாயவேலை செய்கிறேன். அ.சா.6 என் உடன்பிறந்த தம்பி. அ.சா.1ஐ தெரியும். ஆஜர் எதிரியை தெரியும் அவர் பெயர் குரு மூர்த்தி, அவர் எனக்கு மருமகன் முறை வேண்டும். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரிலுள்ள 1-வது கையெழுத்து என்னுடையதுதான். சுமார் 10 வருடங்களுக்கு முன்பு ஒருநாள் காவல் நிலையத்தில் வைத்து போலீசார் கையெழுத்து வாங்கினார்கள். அதில் என்ன எழுதியிருந்தது என்று நான் படித்துப்பார்க்கவில்லை. என்னுடன் யார் கையெழுத்து செய்தார்கள் என்று தெரியாது. போலீசார் என்னை விசாரித்தனர். பார்வை மகஜரிலுள்ள எனது கையெழுத்து அ.சா.ஆ.3 ஆகும்.

(சாட்சியை பிறழ்சாட்சியாக அறிவிக்க கோரி அரசுதரப்பில் கேட்டுக்கொண்டதன்பேரில் அனுமதிக்கப்படுகிறது)

குறுக்கு விசாரணை அரசுதரப்பில்:

போலீசார் விசாரணையில் கடந்த 21.12.08ம் தேதி மாலை சுமார் 05.30 மணிக்கு நானும் முடிமன்னன் என்பவரும் கொட்டகுடியிலுள்ள சம்பவ இடமான நயித்தான்பட்டி பிரிவு போகும் பதை ரோட்டில் தென்னங்கன்று பெரியகருப்பன் நெல் வயல் அருகில் நானும், முடிமன்னன் என்பவரும் சென்றுகொண்டிருந்தபோது மேலூர் காவல் நிலைய சார்பு ஆய்வாளர் அங்கு வந்து எங்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு

பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார்கள் என்றும், அந்த பார்வை மகஜரில் நானும் முடிமன்னன் என்பவரும் கையெழுத்து செய்தோம் என்று சொல்லிவிட்டு தற்போது எதிரி என் உறவினர் என்பதாலும், எதிரி கேட்டுக்கொண்டதாலும் உண்மையை மறைத்து பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

குறுக்கு விசாரணை:

அ.சா.1 ராமசாமி எனக்கு என்ன உறவுமுறை என்றால் மாமன் முறை.

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.

C.C.No. 548 /2009

Deposition of witness for: PW - 8

| | | | |
|---|---|---|---|
| Name | : Mudimannan | Father/Husband Name: | Paulsami |
| Village | : | Taluk | : |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |

Date : 14.12.2020

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 2020.

முதல் விசாரணை:

நான் கொட்டகுடியில் வசிக்கிறேன். விவசாயவேலை செய்கிறேன். அ.சா.1ஐ தெரியும், அவர் எனக்கு பங்காளி முறை. ஆஜர் எதிரி குருமூர்த்தியும் எனக்கு பங்காளி முறையாகும். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரிலுள்ள 2-வது கையெழுத்து என்னுடையதுதான். சுமார் 10 வருடங்களுக்கு முன்பு ஒருநாள் எங்கள் ஊர் மந்தைகோயில் அருகில் வைத்து போலீசார் வந்து விசாரித்தபோது நானும் நல்லதம்பி என்பவரும் சாட்சியாக கையெழுத்து செய்தோம். போலீசார் என்னை விசாரிக்கவில்லை. பார்வை மகஜர் அ.சா.ஆ.4 ஆகும்.

குறுக்கு விசாரணை: இல்லை.